REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: புரட்டாசி 16உ புதன் (2—10—57) ★ ★ வெளியூர்: புரட்டாசி 17உ வியாழன் (3—10—57) [இதழ் 94

'சட்டங்கள் தெளிவாக அமையவேண்டும்'

புதுடில்லி, அக். 1—

'மத்திய சர்க்காரின் சட்ட இலாகாவைச் சேர்ந்தவர்கள் மசோதாக்களைத் தயாரிக்கும்போது தனிக் கவனம் செலுத்த வேண்டும்' என்றும், 'இந்தச் சட்டங்களுக்கான சர்க்காரின் நோக்கங்கள் தெளிவாக வெளிப்படும் வண்ணம் சட்டங்கள் அமைதல் வேண்டும்' எனவும், 'நிறைவேற்றப்படுகிற சட்டங்களுக்கு நீதிமன்றங்களில் வேறு வியாக்கியானம் தரப்படும் நிலை ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்' என்றும், மத்திய சர்க்கார் சட்ட இலாகாவினர் கூட்டம் ஒன்றில் பேசுகையில் உள்நாட்டமைச்சர் பண்டித பந்த் தெரிவித்திருக்கிறார்.

'பாரபட்சம் காட்டுவது அநியாயமானது'

'மத்திய சர்க்கார் ஊழியரைப்போலவே எங்களுக்கும் ஊதியம் வேண்டும்'

'கோரிக்கைகளை இரண்டாவது சம்பளக் குழுவின் பரிசீலனைக்கு விடுக'

தென்மண்டல சர்க்கார் ஊழியர்களின் ஒருமித்த குரல்

ஐதராபாத், அக். 2—

தென்னாட்டு மாநிலங்களான தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம், கன்னடம் ஆகிய நான்கு மாநிலங்களின் சர்க்கார் ஊழியர்கள் தங்கள் கோரிக்கைகளுக்காகப் போராடும் நோக்குடன் ஒரு சங்கம் அமைத்துள்ளனர்.

'தென் மண்டல சர்க்கார் ஊழியர் பெடரேஷன்' என்ற இந்த அமைப்பில், தென்னாட்டின் நான்கு மாநிலங்களின் சர்க்கார் ஊழியர் சங்கங்களின் பிரதிநிதிகள் இடம் பெற்றுள்ளனர்.

ஐதராபாத்தில் நேற்று கூடிய 'பெடரேஷன்' மாநில சர்க்கார் ஊழியர்களின் சம்பள விகிதங்களையும், இதர 'படி'களையும் திருத்தி அமைக்கும் விஷயத்தையும், நிறுவப்பட்டுள்ள இரண்டாம் சம்பளக் கமிஷன் கவனிக்க வேண்டும் என்று தீர்மானம் மூலம் கோரியுள்ளது.

மத்திய—மாநில சர்க்கார் ஊழியர்களின் ஊதிய விகிதங்களில் நிலவும் பெரும் ஏற்றத் தாழ்வு இனியும் நீடிக்கக் கூடாது என்றும், மாநில சர்க்கார் ஊழியர்களின் பிரச்சினைகளை சர்க்கார் முறையாகப் பரிசீலிக்கவில்லை என்றும் மற்றொரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

மத்திய — மாநில சர்க்கார் ஊழியர்களின் சம்பள விகிதங்களில் நிலவும் பெரும் ஏற்றத் தாழ்வுகள், வேறுபாடுகள், பாரபட்சங்கள் அநியாயமானவை—தேச விரோதமானவை என்றும் 'பெடரேஷன்' தெரிவித்துள்ளது.

பண்டித நேருவும், உள்நாட்டு அமைச்சரும் இந்த வேறுபாடுகளுக்கு நியாயமே இல்லை எனத் தெரிவித்தான பிறகு, தொடர்ந்து அநீதி நீடிக்கக் கூடாது என்றும் 'பெடரேஷன்' மற்றொரு தீர்மானத்தில் கூறியுள்ளது.

100 பாங்கி ஊழியர்களுக்கு 'சம்மன்'

வேலைநிறுத்தம் நீடிக்கிறது

கல்கத்தா, அக். 1—

டெல்லி, சர்க்கார் சட்ட விரோதமானது என்று பிரகடனம் செய்த பின்னரும், பாங்கி ஊழியர் வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து நடத்தி வருவதை ஒட்டி, நகரில் எட்டு பாங்கிகளைச் சேர்ந்த சுமார் 100 ஊழியர்கள், வரும் அக்டோபர் 12-ந் தேதியன்று நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டுமென 'சம்மன்' பிறப்பிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது.

சேக் அப்துல்லா விடுதலை?

சேக் அப்துல்லாவை விடுதலை செய்வது என்று முடிவாகிவிட்டதாகவும், ஆனால், அவரை எப்போது விடுவிப்பது என்பது தான் முடிவாகவில்லை என்றும், காஷ்மீர் முதல்வர் பக்ஷி குலாம் புதுடில்லியில் கூறியுள்ளார்.

காஷ்மீர் பிரச்சினை

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் விவாதம்

நியூயார்க், செப். 30—

ஐ. நா. பாதுகாப்புச் சபை மீண்டும் அக்டோபர் திங்கள் 8-ந் தேதி கூடும்போது, காஷ்மீர் பற்றியே தொடர்ந்து விவாதிக்கும் என்று தெரிய வருகிறது.

இன்னும் தேதி நிர்ணயமாகவில்லை என்றும், ஆனால் இந்த நாளில் சபை கூடுவதுதான் சாத்தியம் என்றும் கூறப்படுகிறது.

கிருஷ்ணமேனன் இந்தியாவின் வழக்கினைத் தொடர்ந்து எடுத்துரைப்பார் என்றும் தெரிய வருகிறது.

பரமக்குடியில் தடையுத்தரவு

பரமக்குடி, அக். 2—

பரமக்குடி நகர எல்லைக்குள் 5 நபர்களுக்கு அதிகமாகக் கூடக் கூடாது என்று தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது; இந்த உத்தரவு ஒரு மாதம் அமுலில் இருக்கும்.

பரமக்குடி சுற்றுப்புறங்களில் ஏற்கனவே தடையுத்தரவு அமுலில் உள்ளது.

சர்வ கட்சிக் கமிட்டி

மதுரை, அக். 1—

இராமநாதபுரம் மாவட்டத்தில் கலகப் பிரதேசங்களில், அமைதி நிலவச் செய்வதற்கான வழிவகைகளைக் கண்டறிந்து செயல்படும் நோக்குடன் இங்கு சர்வ கட்சிக் கமிட்டி ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

கேரளமும் மதுவிலக்கும்!

பெங்களூர், செப். 30—

"மதுவிலக்கு பற்றி அரசாங்கம் எந்தக் கொள்கையையும் உருவாக்கவில்லை. இப்போது மலபார், திருவாங்கூர் மாவட்டங்களில் மதுவிலக்கு அமுலில் உள்ளது. இதை மேலும் விரிவாக்குவதா, கைவிட்டுவிடுவதா என்று முடிவு செய்யவில்லை; இதுபற்றி மத்திய அரசாங்கமும் ஏதும் அறிவிக்கவில்லை" என்று கேரள நிதி அமைச்சர் அச்சுத மேனன் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புச் சபைக்கு புதிய உறுப்பினர்கள்

நியூயார்க், அக். 1—

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் இடம் பெற்றிருந்த ஆஸ்திரியா, கியூபா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்குப் பதிலாக ஜப்பான், கனடா, பனமா ஆகிய மூன்று நாடுகளும் பொதுச் சபையால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன.

ஜப்பான் தேர்ந்தெடுக்கப்பட்டதை அமெரிக்கா வரவேற்றது; ஆனால், 'இது ஐ. நா. சட்டத்தையும், லண்டன் மாநாட்டு ஒப்பந்தத்தையும் புறக்கணிக்கும் செய்கையாகும்' என்று ரஷ்யா எதிர்த்தது.

7,000 தொழிலாளர்களின் ஒரு மாத உள்ளிருப்பு வேலைநிறுத்தம்

டால்மியா தொழிற்சாலை மூடப்படுகிறது

பாட்னா, அக். 1—

கடந்த செப். 3-ந் தேதியன்று பாட்னா ரோடாஸ் தொழிற்சாலையில் துவங்கிய 7,000 தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் இன்னும் நீடிக்கிறது.

டால்மியா நகரில் அமைந்துள்ள இந்தத் தொழிற்சாலையின் அதிபரான டால்மியா, முன்பு ஒப்புக்கொண்டபடி, போனஸ் முதலியன வழங்கப் பிடிவாதமாக மறுத்துவருவதை எதிர்த்தே தொழிலாளர் உள்ளிருப்பு வேலைநிறுத்தம் துவக்கியுள்ளனர் என்று தெரியவருகிறது.

இதனைத் தொடர்ந்து நிர்வாகிகள், கதவடைப்புக்கு உத்தரவிட்டனர் என்றும், இதனால் நிலைமை மோசமாகுமெனக் கருதிய போலீசார் 144 தடையுத்தரவு விதித்திருக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

800 மருத்துவக் கல்லூரி மாணவர்கள் வேலை நிறுத்தம்

நாகபுரி, அக். 1—

இங்குள்ள ராபர்ட்சன் மருத்துவப் பள்ளி மாணவர்கள் 800 பேர், இன்று முதல் காலவரையறை இன்றி வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர் எனத் தெரியவருகிறது.

நிதிக் குழு அறிக்கை

புதுடில்லி, அக். 1—

இரண்டாவது நிதிக் குழு தனது அறிக்கையை முடித்து இந்தியக் குடியரசுத் தலைவரிடம் தந்துள்ளது.

அறிக்கையில் காணப்பட்டுள்ள முடிவுகள் பற்றி உறுப்பினர்களிடையே கருத்து வேற்றுமை ஏதும் இல்லையாம்.

அறிக்கை வெளியாகும் முன்னர் செய்தித் தாள்கள் ஏதும் கூறவேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மறைந்த கவர்னருக்கு இறுதி வணக்கம்

அண்ணா, இரா. நெடுஞ்செழியன் நடராசன் மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினர்

சென்னை, அக். 2—

மாநில கவர்னர் ஜான் அவர்கள் நேற்று இயற்கை எய்தினார்; அன்னாருக்கு தி. மு. கழக சட்டசபைக் கட்சியின் சார்பிலும், தி. மு. கழகத்தின் சார்பிலும் இறுதி மரியாதை தெரிவிக்கும் பொருட்டு அண்ணா அவர்களும், பொதுச் செயலாளர் இரா. செடுஞ்செழியன், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் ஆகியோரும் இன்று பகல் 12-15 மணிக்கு இராஜபவனம் சென்றனர்.

கழகத்தின் சார்பில் மூவரும் மலர் மாலைகள் அணிவித்து, மறைந்த கவர்னருக்கு இறுதி வணக்கம் செலுத்தினர்.

(ந. நி.)

பாட்டாளிகளின் பரிதாப முடிவு

சுரங்கத்தில் 11 பேர் மரணம்

கடப்பை, அக். 2—

கடப்பையிலிருந்து 25 மைல் தூரத்திலுள்ள இராசபாளையம் என்ற கிராமத்தில் சென்ற ஞாயிறன்று ஒரு சுரங்கம் இடிந்து விழுந்ததின் காரணமாக 11 பேர் உயிரிழந்தனர் என்றும், மற்றும் பலர் காயமுற்றனர் என்றும் தெரிய வருகிறது.

விபத்து நடந்தபோது சுரங்கத்தில் 70 பேர் வேலை செய்து கொண்டிருந்தனர் என்று கூறப்படுகிறது.

விடுதலை வீரர் தாயகம் திரும்புவார்!

மகாரியஸ் பாதிரியாருக்கு விடுதலை

நிகோசியா, அக். 1—

சைப்ரஸ் தீவிற்கு விடுதலை கோரி போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் மகாரியஸ் பாதிரியாரை பிரிட்டிஷார் நாடு கடத்தி வைத்திருப்பது தெரிந்ததே. இப்போது அவர் நாடு திரும்ப வழி செய்வதென பிரிட்டன் முடிவு செய்திருப்பதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

மேலும், சைப்ரசின் கவர்னராயிருக்கும் பீல்டு மார்ஷல் ஜான் ஹார்டிங் என்பவரை பதவியிலிருந்து ஓய்வுபெறச் செய்யவும் பிரிட்டன் முடிவு செய்திருக்கிறதாம்.

ஆதிபத்தியத்திற்கு வேட்டு!

பாலத்தைத் தகர்த்தனர்

பம்பாய், அக். 1—

கோவாவில் முக்கியமான நகரமான மாபூசாவை, அசானோரா நகருடன் இணைக்கும் சாலையில், திவிம் என்ற இடத்தில் உள்ள பாலத்தினைத் தலைமறைவாயிருக்கும் கோவா தேசியவாதிகள் வெடிவைத்துத் தகர்த்துவிட்டனர் என்று தெரியவருகிறது.

எப்பக்கமும் வந்து புகுந்திடுது—இந்தி

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 2—10—57 புதன்

ஏமாற்று வித்தை!

தென் மண்டலக் குழுவின் இரண்டாவது கூட்டம், இந்தியப் பேரரசின் உள்நாட்டு அமைச்சர் கோவிந்த வல்லப பந்த் தலைமையில் இப்பொழுது நடைபெற்று இருக்கிறது. அக்கூட்டத்தில் தென்னகத்தைப் பொறுத்த சில முக்கிய பொருள் பற்றி ஆராயப்பட்டிருக்கிறது.

தென் மண்டலக் குழுவை உருவாக்கியபொழுதே அக்குழுவில் மைசூர் மாநிலத்தையும் சேர்த்திருக்க வேண்டும். அவ்வாறு சேர்க்கப்படுவதே முறையும் பொருத்தமுடையதுமாகும். அந்த நியாயமான செயலைத்தான் இந்தியப் பேரரசு செய்திருக்கக்கூடும் எனவும் அனைவரும் எதிர்பார்த்தனர்.

ஆனால், இந்தியப் பேரரசோ, அனைவரும் எதிர்பார்த்ததற்கு மாருக மைசூர் மாநிலத்தை பம்பாய் மாநிலத்துடன் சேர்த்து மேற்கு மண்டலக் குழுவில் அடைத்துப் போட்டுவிட்டது. அவ்வாறு அடைத்துப் போட்டிருப்பது பொருந்தக் கூடியதன்று. அக்கூட்டினால் மைசூர் மாநிலத்திற்கு ஏற்படக்கூடிய குறிப்பிடத்தகுந்த உருவான பலன்களும் கிடையா. அது இயற்கை வழியும் ஆகாது.

இந்த உண்மை இப்பொழுது மெள்ள மெள்ள அம்பலமாகி வருகிறது. இதை மறைக்க இந்தியப் பேரரசால் இயலவுமில்லை. இவ்வாறு முழு உண்மையை மறைப்பது என்பது தனது ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது என்பதையும் இந்தியப் பேரரசு இன்று உணரத் தலைப்பட்டு இருக்கிறது.

மைசூரின் எதிர்கால நலன்கள், தென்னக மாநிலங்களான ஆந்திரம், தமிழகம், கேரளம் ஆகிய ஓர்குடிப்பிறந்தவைகளுடன் பின்னிப் பிணைந்துகிடப்பனவாகும். மைசூரின் வாழ்வும் தாழ்வும் மற்ற தென்னக சோதரமாநிலங்களுடன் ஒன்றுபட்டுக் கிடப்பனவாகும். இது ஒன்றுதான் இயற்கை வழி ஏற்பாடாகும்.

இத்தகு இயற்கை ஏற்பாட்டை உருக்குலைக்கும் உள்ளெண்ணத்துடன்தான், மற்ற தென்னக மாநிலங்களிடமிருந்து மைசூரைத் தனியாகத் துண்டித்து எடுத்து, பம்பாய் மாநிலத்துடன் ஒட்டவைத்து மேற்குமண்டலக் குழுவை உருவாக்கி இருக்கிறது இந்தியப் பேரரசு. இத்தகைய செயற்கை அமைப்பை உருவாக்குவதில் இந்தியப் பேரரசிற்கு இருக்கக்கூடிய அக்கறைதான் என்ன? திறம்படச் செயல்பட்டாலும் படாமற்போனாலும் பெயரளவிற்காவது மைசூர் மாநிலத்தை பம்பாய் மாநிலத்துடன் இணைத்துவைப்போம் என இந்தியப் பேரரசு கருத்துக் கொண்டிருப்பதற்குரிய நியாயந்தான் யாது?

தென்மண்டலக் குழுவில் மைசூர் மாநிலம் நிலையாக இணைந்திருப்பதைத் தான் விரும்பவில்லை என்பதைத் தனது சொல் மூலம் இந்தியப் பேரரசு காட்டிக்கொண்டிருக்கிறது. அவ்வாறு இணைந்திருப்பதில் ஏதோ ஒரு அபாயம் இருப்பதாக இந்தியப் பேரரசு திடமாக நம்பிக்கொண்டிருக்கிறது. தனக்கு இயல்பாகத் தோன்றி இருக்கக்கூடிய அவ்வச்சத்தின் விளைவாகத்தான், மற்ற தென்னக மாநிலங்களிலிருந்து பிரித்து, பம்பாய் மாநிலத்துடன் மேற்கு மண்டலக் குழுவில் மைசூரை இந்தியப் பேரரசு இணைத்து வைத்திருக்கிறது. நிற்க,

தென்னக மண்டலக் குழுவின் இரண்டாவது கூட்டத்தில் தென்னக மாநிலங்களின் எதிர்கால வளத்திற்கான சில முக்கியப் பொருள்பற்றி ஆராயப்பட்டன என்று முதற்கண் குறிப்பிட்டிருந்தோம். அவற்றில் தலைசிறந்து விளங்குவது தமிழகத்தின் நீர்வளத்தைப் பெருக்குவதற்காகப் பேசப்பட்ட பேச்சேயாகும். அது போன்றே, தேவையற்றதும் பயங்கரமானதுமாக இருப்பது தென் மண்டலத்துக்கென ஒரு பொது போலீசுப் படையை ஏற்படுத்துவதுபற்றிப் பேசப்பட்டிருக்கும் பேச்சு.

பாசன வசதிகளைப் பொறுத்தவரையில் தமிழகம் போதிய வாய்ப்பும் வசதியுமற்றுக் கிடப்பதாகும். அதே நேரத்தில் ஆந்திராவிலும், கேரளத்திலும் அமோகமான தண்ணீர் பயன்படுத்தமுடியாமல் வீணாகக் கடலில் பாய்ந்துகொண்டு இருக்கிறது. அவ்வாறு வீணாகக் கடலில் பாய்ந்து பயனற்றுப் போகும் பெரும் வெள்ளத்தைத் தமிழகதின் தண்ணீர் பஞ்சத்தைப் போக்க நன்கு பயன்படுத்த முடியும்.

அதாவது, ஆந்திராவில் பாய்ந்துவரும் கோதாவரி-கிருஷ்ணா நீரை தமிழகத்திற்குக் கொண்டுவர இயலும். அதன் விளைவாக, தமிழகத்திலுள்ள செங்கல்பட்டு, தென்னாற்காடு மாவட்டங்கள் முதல் முதலாகப் பலனடைவது நிச்சயம்.

கோதாவரி-கிருஷ்ணா நீரை தமிழகத்திற்குக் கொண்டு வருவதை ஆந்திர முதலமைச்சர் எதிர்க்கவில்லை என்பதுடன், அதற்கு ஆதரவாகவும் இருக்கிறார். ஆந்திராவிலிருந்து தமிழகத்திற்குத் தண்ணீரைக் கொண்டுவரும் திருப்பணியை வெற்றிகரமாக நிறைவேற்றி வைக்கப் பெருந்தொகை செலவில் திட்டமிடவேண்டும். அத்திட்டத்திற்காகும் பெருந்தொகைச் செலவை ஏற்றுக் கொள்வது என்பது ஒருபக்கம் இருக்க, முதல் முதலாக அத்திட்டத்தை ஒப்புக்கொள்ள இந்தியப் பேரரசு திருவுளம் கொள்ளவேண்டும்.

இந்தியப் பேரரசின் திருவுளம் எவ்வாறு இருக்கிறது என்பதைக் கண்டறியும் சங்கடத்தை உள்நாட்டு அமைச்சர் பந்த் நமக்கு விட்டுவைக்கவில்லை. பெருந்தொகை செலவழிக்க வேண்டிவருமே, அதற்கு இப்பொழுது எங்கே போவது எனக் காரணங்காட்டி, திட்டத்தைக் கருவிலேயே சிதைத்துப் போட்டுவிட்டார் உள்நாட்டு அமைச்சர் கோவிந்த வல்லப பந்த்!

உள்நாட்டு அமைச்சர் பந்த் கூறிவிட்டால் என்ன? நமக்கு ஆறுதல் கூறவும் ஆசைமூட்டவும் நமது முதலமைச்சர் தவறிவிடுவாரா என்ன? மூன்றுவது திட்டத்தில் நிச்சயமாக மேற்படி திட்டம் மேற்கொள்ளப்படும் என்று நமக்கு ஆறுதல் மொழி புகல்கின்றார் முதலமைச்சர் காமராசர்!

தேவையற்றதும் பயங்கரமானதுமான ஒரு பொது ஏற்பாடு பற்றியும் மண்டலக் குழு ஆராய்ந்து இருக்கிறது. அதுதான் தென் மண்டலப் பாதுகாப்புக்கென ஒரு பொது போலீஸ் படையை நிறுவுவது என்பது. இவ்வேற்பாட்டிற்கு, செலவுச் சிக்கனம் என்பதின் பெயரால் ஆதரவு திரட்ட தென்னக மாநிலங்களின் முதலமைச்சர்கள் இரண்டொருவர் முன்வரக்கூடும்.

இத்தகு பொது அமைப்பால் ஏற்படக்கூடும் எனக் கூறப்படும் செலவுச் சிக்கனம் கணிசமானதாக இருக்க முடியாது. அது வெறும் கற்பனை! ஏமாற்று வித்தை!

இந்தி எதிர்ப்புணர்ச்சித் தீ எங்கும் பரவட்டும்

'இந்தியை இப்பொழுதே எதிர்க்காவிடில் நம் பின்தலைமுறைகள் அடிமைகளாக நேரிடும்'

திருவண்ணாமலை மாநாட்டில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் எச்சரிக்கை

★

"இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமாம்—நீங்கள்
எல்லோரும் வாருங்கள் நாட்டினரே!
செந்தமிழ்க்குத் தீமை வந்தபின்னும்—இந்த
தேகம் இருந்தொரு லாபம் உண்டோ!
விந்தைத் தமிழ் மொழி எங்கள் மொழி—அது
வீரத் தமிழ்மக்கள் ஆவியென்போம்!
இந்திக்குச் சலுகை தந்திடுவோர்—அந்த
ஈனரைக் காரி உமிழ்ந்திடுவோம்!
எப்பக்கம் வந்து புகுந்துவிடும்—இந்தி
எத்தனைப் பட்டாளம் கூட்டிவரும்?
அற்பமென்போம் இந்த இந்திதனை—அதன்
ஆதிக்கம் தன்னைக் குறைத்திடுவோம்!
தீங்குள்ள இந்தியை நாம் எதிர்ப்போம்—உயிர்த்
தித்திப்பை எண்ணிட்ப் போவதில்லை!
மரங்குயில் கூவிடும் பூஞ்சோலை—எமை
மாட்ட நினைக்கும் சிறைச்சாலை!
எங்கள் உடல் பொருள் ஆவியெல்லாம்—எங்கள்
இன்பத் தமிழ் மொழிக்கே தருவோம்!
ஏங்கவிடோம் தமிழ்த் தாய்தனையே—இவ்
வுயிர் உடலைவிட்டு நீங்கும்வரை!

என்ற உணர்ச்சியோடு நீங்கள் அனைவரும் பாடுபடுதல் வேண்டும்; இந்த உணர்ச்சி ஆங்காங்கு பரவச் செய்தல் வேண்டும்; இந்தத் தெளிவுணர்ச்சியையும்—இந்தத் தெளிவையும் ஆங்காங்கு பரப்பவேண்டும்"—என்று பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், திருவண்ணாமலையில் 21—9—57-ல் நடந்த இந்தி எதிர்ப்பு மாநாட்டில் பேசுகையில், தம் பேச்சு முடிவில், கூடியிருந்த மக்களைக் கேட்டுக்கொண்டு இந்தி எதிர்ப்புப் போருக்கு அன்பழைப்பு விடுத்தார். (பேச்சின் முற்பகுதி ஏற்கனவே வெளியாகியுள்ளது)

அவரது பேச்சின் முழுவிவரம்:-

"நாம் எந்தவிதத்தில் பார்த்தாலும், தென்னாட்டைப் பொறுத்தவரையில் இந்தி இம்மியளவும் அவசியமில்லை. டாக்டர் சுப்பராயன் சென்னையில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்—'தமிழர்களை விட அதிகமாக இந்தியை எதிர்க்கிறவர்கள் வங்காளிகள்' என்று! அவ்வளவுக்கு இந்தியை எதிர்த்துத் தீரவேண்டிய அளவுக்கு வங்காளிகள் இருக்கிறார்கள்.

"வடநாட்டில்—பஞ்சாப் பகுதியில் இந்தி நுழையமுடியாத அளவில் இந்திக் கிளர்ச்சி செய்கிறவர்களெல்லாம், 'இந்தியைப் பாதுகாப்போம்' என்று அவர்கள் கிளர்ச்சி ஆரம்பிக்கவேண்டிய அளவுக்கு இந்தி அங்கே அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறது. அதுபோல, மராட்டியப்பகுதியிலேயும் 'இந்தி அவசியமில்லை' என்ற உணர்ச்சியை நாளுக்கு நாள் வளர்ந்துக்கொண்டிருக்கின்ற அத்தகைய நிலைமையையும் நாம் பார்க்கின்றோம்.

"இந்த நாட்டில் மூன்றுகோடி தமிழர்கள் வாழ்கிறார்கள் என்றால்—சராசரி ஆள் ஒன்றுக்கு 10 அஞ்சல் மடல்கள் எழுதுகிறார்கள் என்றால், ஆண்டு ஒன்றுக்கு 30 கோடி கார்டுகளை தமிழிலே அடித்தால் ஆகாதா? திருவண்ணாமலையிலே இருப்பவர் திருவாரூரிலே இருப்பவருக்கு எழுத இந்திக் கார்டா? ஏன்? அதைத் தமிழிலே அடித்தால்—அது அடிபடாதா? அதை அஞ்சல் நிலையத்தில் விற்கமாட்டார்களா? மணியார்டர் பாரமும் அப்படித்தான்.

"இந்தியாவினுடைய 14 மொழிகளிலும் ஆங்கிலத்திலும் கார்டுகள் அடித்து பக்கத்தில் பக்கத்தில் வைத்தால், தமிழன் தமிழனோடு தொடர்பு கொள்வதற்குத் தமிழ்க் 'கார்டு'களையும், தமிழ் அல்லாத அவ்வளவு பேர்களோடு தொடர்புகொள்ள அகில உலகப் பொது மொழியாகிய ஆங்கிலக் 'கார்டு'களும் போதுமே!

"தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், தமிழே எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் 76 பேர்கள் இருக்கிற நாட்டில்—இந்தியைக் கொண்டுவந்து எழுதியிருக்கிறார்கள் என்றால், வடநாட்டு இந்தி ஆதிக்கம் இதுவரை பரவியிருக்கிறது என்று வெளியுலகுக்குக் காட்டுவதற்காக ஏற்பட்ட ஆதிக்க—ஏகாதிபத்தியத்தினுடைய தன்மையா, அல்லவா என்பதைத்தான் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சின்னஞ்சிறு புகைவண்டி நிலையங்களில் இந்தியில் எழுதியிருக்கிறார்கள்; அது அவசியத்திற்காகவா என்றால், அல்ல. ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கு எழுதிக் காட்டியிருக்கிறார்கள்; எந்த வழியிலும் இந்தி தேவையில்லை.

"சிலர் ரஷ்யாவையும்—அமெரிக்காவையும் உதாரணமாக எடுத்துக் காட்டுகிறார்கள். 18 மொழிகள் வாழுமிடத்தில் ரஷ்ய மொழிதான் இருக்கிறதென்றால், அதனுடைய வரலாற்றுச் சூழ்நிலையை நீங்கள் அறிவீர்களேயானால், ரஷ்யமொழி 18 மொழிகளாக—பல மொழிக்கு எழுத்தே கிடைக்காமல் இருந்து, இப்பொழுதுதான் 40—50 ஆண்டுக்காலமாக எழுத்தை உருவாக்கியிருக்கிறார்கள். ரஷ்ய மொழிகளில் சிறந்த மொழி—விஞ்ஞானங்களை பரப்பக் கூடிய மொழியாக இருந்த மொழி ரஷ்ய மொழி. எனவே, அந்த மொழி ரஷ்யாவின் பொது மொழியாவதை, மற்றைய அதைவிட தரங்குறைந்த—இலக்கணம் வளமற்ற மொழிகள் ஏற்றுக் கொள்ளக்கூடியனவாக இருந்தன.

"அமெரிக்காவை எடுத்துக் கொண்டால், முதன் முதலில் அங்கே குடியேறி ஆதிக்கம் செலுத்தியவர்கள் ஆங்கிலேயர் என்ற காரணத்தினாலும், மற்ற ஐரோப்பிய நாட்டினர்கள் வந்தாலுங்கூட ஆங்கில மொழியே கற்றுக்கொண்டு மெல்ல மெல்ல ஆங்கிலத்தையே அந்த நாட்டுக்குரிய மொழியாக ஆக்கிக் கொண்ட காரணத்தாலும் அமெரிக்கா முழுவதும்—ஸ்பானிஷ் தேசத்தைச் சேர்ந்தவர்களும், ஜெர்மன் தேசத்தைச் சேர்ந்தவர்களும், போர்ச்சுகலைச் சேர்ந்தவர்களும், இத்தாலியைச்சேர்ந்தவர்களும், அங்கு சென்று இருந்தாலும் — ஆங்கிலமே உரிய அரசியல் மொழியாக—அமெரிக்காவில் உருவாகிவிட்டது.

"இந்த இரு நாட்டையும் சுட்டிக்காட்டிக் கூறுகிறார்கள்—'இங்கே ஒரு பொது மொழி வேண்டாமா? அது இந்தியாகத்தான் இருக்கட்டுமே'—என்று! அந்த நிலையில் பார்த்தாலும் வளமுடைய மொழியல்ல இந்தி! எனவே, எந்த நிலையில் நின்று பார்த்தாலும்கூட இம்மியளவும் இந்தி தேவையில்லை.

"இந்த நிலைமைக்கு—இந்தி ஆதிக்கம் வெற்றிகொள்ளுவதற்கு இடம் கொடுப்போமேயானால், சவ மொழியைப்போல் தமிழ், ஏட்டு வழக்கிலே வருமேதவிர, நாட்டு மக்களால் பேசப்படும் மொழியாக, இன்னும் 500—1000

(4-ம் பக்கம் பார்க்க)

கிண்டி தொழிற் பயிற்சி நிலையம் விரிவாகிறது

சென்னை, செப். 30—

கிண்டியில் மின்சாரக் கருவிகள் உற்பத்திக்கான பணி நிலயத்தை விரிவாக்க அரசாங்கம் அனுமதித்திருக்கிறது; இந்தத் திட்டத்துக்காகக் கூடுதல் முதலீட்டுச் செலவு ரூ. 3,93,400-ம் கச்சாப் பொருள்கள் வாங்கக் கூடுதல் செலவு ரூ. 8½ இலட்சமும் ஆகும்.

எத்தனையோ உருவில் நுழைந்திடுதே!

நெய்வேலித் திட்டம்!

தொழில் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை அளிக்கும்

சேலம், செப். 29—

சேலம் ரோட்டரி சங்கக் கூட்டம் திரு. சி. அனுமந்த ராவ் தலைமையில் நடைபெற்றது. அக் கூட்டத்தில் பேசிய நெய்வேலி ...

ரேஷன் சிவில் இலாகா ... வாக எஞ்சினீயர் வி. எ. அர்த்தனூர் என்பார் குறிப்பிட்டதாவது :—

"நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி தோண்டி எடுக்கும் திட்டத்திற்கு ரூ. 68 கோடி செலவாகும். சென்னை மாநிலத்தில் போதுமான அளவு மின்சார சக்தி இல்லை. நெய்வேலித் திட்டத்தால் மின்சார சக்தி உற்பத்தி அதிகரிக்கும். நெய்வேலி திட்டத்தினால் சென்னை மாநிலத்தில் பல புதிய தொழிற்சாலைகள் ஏற்பட வாய்ப்புகள் இருக்கின்றன. சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை ஏற்படுவதற்கும் நெய்வேலித் திட்டம் பெரிதும் பயன்படும். நெய்வேலித் திட்டத்தால் 10 ஆயிரம் முதல் 16 ஆயிரம் பேர்களுக்கு வேலை கிடைக்கும்."

****

கழகத் தோழர்களுக்கு முக்கிய அறிவிப்பு

★

தி. மு. கழகக் கிளைகளின் நிர்வாகிகள் தேர்தல் பற்றிய செய்திகள், மாவட்டச் செயலாளரின் கையொப்... அனுப்பப்பட்டால்தான் 'நம நாடு' இதழில் வெளியிடப்படும் என்று பொதுச்செயலாளர் விடுத்திருக்கும் அறிக்கையை நினைவில் கொண்டு, கிளைக் கழகத் தோழர்கள் அந்தச் செய்திகளை மாவட்டக் கழகச் செயலாளர் கையொப்பத்துடன் அனுப்ப வேண்டுகிறோம்.

—ஆசிரியர்

18,000 மீனவர்கள் பாதிக்கப்பட்டனர்!

துரித உதவி கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

சென்னை, செப். 30—

இந்த ஆண்டு மே—ஜூலை இடையே 'கோலா' மீன் பிடிப் பருவம் ... மனவர்களுக்கு ... நத்தை அளித்துவிட்டதால் அவர்கள் கஷ்டத்தைக் குறைக்க உதவும் முறையில் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தானிய நியாய விலைக்கடைகளைத் துவக்குதல், வலைகளைப் பழுது பார்ப்பதற்கு உரிய கயிறு நூல் ஆகியவைகளை 31-1-58 வரை பாதி விலையில் கொடுத்தல் முதலிய உதவி நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளது; இதற்காக ரூ. 48,000 அனுமதிக்கப்பட்டுள்ளது.

காலம் கடந்து உதவி செய்வதில் பயனில்லையாகையால் உதவித் திட்டங்களைத் துரிதமாக அமுல் நடத்தும்படி உத்தரவிடப்பட்டிருக்கிறது. தஞ்சைக் கரையோரத்தில் நாகப்பட்டினத்திற்கு வடக்கே 20 கிராமங்களில் சுமார் 18,000 மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அன்பளிப்புகள்

★

குடியாத்தம் தி. மு. க. ஆதரவாளரும், ஓமியோபதி டாக்டருமான டி. ஜி. இராசன் அவர்களின் மூத்த குழந்தைக்கு 'மதிவாணன்' என்றும், இளைய குழந்தைக்கு 'இளமதி' என்றும் பெயரிடப்பட்டதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 ...

ஆசிரியருக்குக் கடிதம்

சேலம் மாவட்டக் கழக நிர்வாக இலட்சணம்

ஐயா,

கடந்த பல மாதங்களாக சேலம் மாவட்டக் கழகத்தினுல் நடத்தப்பட்டுவரும் சில பள்ளிகள் மூடப்பட்டுக்கிடக்கின்றன. உதாரணமாக கருப்பட்டிபாளையம், கிங்கிலிப்பட்டி, ... டன்பாளையம், குன்னமலைக் கிராமம் ஆகிய கிராமங்களில் (நாமக்கல் தாலுக்கா) உள்ள பள்ளிகள், ஆசிரியர்கள் இல்லாமையால் மூடப்பட்டுள்ளன. இதனுல் அவற்றில் ஏற்கனவே பயின்றுவந்த பிள்ளைகள் தாம் கற்ற கல்வியையும் மறந்து கொண்டு வருகின்றனர். இதை, போர்டு தலைவரின் கவனத்திற்குக் கொண்டு சென்றும் ஒரு பயனும் ஏற்படவில்லை.

அதே சமயத்தில் வேலைவேண்டும் என்று பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நூற்றுக்கணக்கில் விண்ணப்பித்துள்ளனர். அவர்கள் வேலையில்லாமல் ஒருபுறம் கஷ்டப்படுகின்றனர்; மறுபுறத்தில் ஆசிரியர்கள் இல்லாமல் நடைபெற்றுக்கொண்டிருந்த பள்ளிகள் மூடப்படுகின்றன. வேலை கோரும் ஆசிரியர்கட்கு வேலை கொடுத்து, மூடப்பட்டுள்ள பள்ளிகளைத் திறப்பதில் ஜில்லா போர்டுக்கு என்ன கஷ்டம் என்பது புரியவில்லை? இதனுல் இதில் ஏதோ மர்மம் இருப்பதாக பொதுமக்கள் சந்தேகிக்க நேரிடுகிறது.

உண்மை விளம்பும்
ஓர் ஆசிரியன்
நாமக்கல் : 12-9-57

★

ஆவன செய்வார்களா ?

ஐயா,

தற்பொழுது ஓராசிரியர் பள்ளிகள் பல நம் மாநிலத்தில் திறக்கப்பட்டு, அப்பள்ளிகளில் வேலை செய்ய பல ஆசிரியர்களை நியமித்து மூன்றாண்டுகள் ஆனதும், அவர்களை ஈராண்டு பயிற்சிக்குச் செல்ல வேண்டும் என்றும், வேலையிலிருந்து நீக்கியும் பல இடையூறுகள் கொடுக்கின்றனர். அவர்கள் எல்லோரும் மூன்றாண்டுபணியாற்றியகாரணத்தால் அவர்களுக்குப் பயிற்சியை ஓராண்டாக மாற்றியும், மற்றும் உதவித் தொகை ரூ. 18-ஐ இன்னும் அதிகமாக்கியும், மற்றும் அவர்கள் வேலைக்கு வரும்பொழுது முதவிடம் தரவும் அரசாங்கம் ஆவன செய்யுமா ?

சே. தங்கவேல்,
மோகனூர் : 30-9-57.

மறைவு

சென்னை 33-வது வட்ட தி.மு. கழகத் தோழர் சுந்தரமூர்த்தியின் தாயார் இலட்சுமி அம்மையார் 12—9—57ல் இயற்கையெய்தினர். அன்னார் மறைவுக்கு 33-வது வட்ட தி. மு. க. சார்பில் தோழர் பாண்டியன் அனுதாபம் தெரிவித்துக்கொள்கிறார்.

* * *

கோவை நகர 13-வது வட்ட தி. மு. க. கிளை செயலாளர் தோழர் இரா. நடராசன் அவர்களின் இரண்டாவது மகன் செல்வ அரசன் 16—9—57-ல் இயற்கையெய்தியது குறித்து மேற்படி வட்ட கழகச் செயற்குழுவினர் அனுதாபம் தெரிவித்துக்கொள்கின்றனர்.

* * *

சென்னை—25-வது வட்ட தி. மு. கழகத் தோழர் பச்சைப்பிள்ளை அவர்கள் 20—9—57ல் இயற்கையெய்தியதைக் குறித்து மேற்படி வட்ட தி. மு. க. உறுப்பினர்கள் அன்னார் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

'நியாய விலை கூட்டுறவு பண்டகசாலைகள் ஏற்படுத்துக'

சர்க்கார் கடைநிலை ஊழியர்கள் கோரிக்கை

சேலம், செப். 23—

சென்னை அரசாங்க கடைநிலை ஊழியர்கள் (பியூன்கள்) சங்க சேலம் மாவட்டக் கிளையின் 10-வது ஆண்டு விழா 15-ந் தேதியன்று, திரு. பி. சுப்பிரமணிய பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

திரு. கே. கோவிந்தராசு பிள்ளை கொடியேற்றினர்; திரு. பி. செல்லப்பிள்ளை எல்லோரையும் வரவேற்றார்; திரு. பி. டி. சிரோமணி விழாவைத் துவக்கி வைத்தார்; திருவாளர்கள் எஸ். மலையாண்டிப் பிள்ளை கெ. எஸ். தேவசகாயம் மற்றும் பலர் பேசினர்.

நடப்பு ஆண்டிற்கு சங்கத்திற்கு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அரசாங்கத்தார் சமீபத்தில் சர்க்கார் சிப்பந்திகளுக்கு ரூ. 12 பஞ்சப்படியில் உயர்த்தியதை வரவேற்றும், சம்பளக் கமிஷன் ஒன்றை ஏற்படுத்துமாறும், விலைவாசிகள் அதிகமாகிக்கொண்டே போவதால் நியாய விலையில் பொருள்கள் கிடைக்க கூட்டுறவு பண்டகசாலைகளை ஆங்காங்கே ஏற்படுத்துமாறும், நகராண்மைக் கழக எல்லைக்குள் பணியாற்றும் ஊழியர்களுக்கு 'சைக்கிள் அலவன்சு' கொடுக்குமாறும் அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொண்டு தீர்மானங்கள் நிறைவேறின. (ந-கி)

'நம் நாடு' இதழ் விற்பனையாளர் தேவை

★

கீழ்க்கண்ட ஊர்களில் 'நம்நாடு' இதழை விற்பனை செய்வதற்கு விற்பனையாளர்கள் தேவை; நிபந்தனைகளுக்கு விண்ணபித்துக் கொள்க :—

பூதலூர்
திண்ணனூர்
மதுராந்தகம்
கல்லிடைக்குறிச்சி
இராஜசிங்கமங்கலம்
பேளூர் (சேலம் மாவட்டம்)
ஆலமரத்துப்பட்டி (கரூர் வட்டம்)
பாகசாலை (மாயூரம் வட்டம்)
சத்திரப்பட்டி

—நிர்வாகி : 'நம் நாடு'

****

கேரள மாநில தி. மு. கழகம்

நவம்பரில் பொதுக்குழுவைக் கூட்ட ஏற்பாடு

14—9—57-ல் நடைபெற்ற வண்டிப்பெரியார் தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டத்திற்குத் தோழர் சுபேர் (கேரள தி. மு. கழகச் செயலாளர்) தலைமை வகித்தார்; அதுபோது ஜூன் மாதத்தில் பாலக்காட்டில் கேரள தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் கூடி எடுத்த முடிவின்படி, வண்டிப்பெரியாற்றில் நவம்பர் மாதத்தில் கேரள மாநில தி. மு. கழகப் பொதுக் குழுவினைக் கூட்டுவதென்றும் அன்றிரவு கழக நிதிக்காக நடக்கவிருக்கும் அண்ணா எழுதிய 'காதல் ஜோதி' (மலையாளம்) நாடகத்திற்குத் தலைமை தாங்கி உரையாற்ற புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களை அழைப்பதெனவும் அன்றைய நிகழ்ச்சிகளுக்கு இசையமுது வழங்க நாகூர் அனிபா அவர்களை அழைப்பதெனவும் முடிவெடுக்கப்பட்டது; மேற்கண்ட முடிவுகளை முயற்சி எடுத்து முடித்துத் தருகின்ற பொறுப்பினை கேரள மாநில தி. மு. கழகச் செயலாளர் கே. எச். எம். சுபேர் அவர்களுக்கு அளிக்கப்பட்டது.

ஏழை மாணவர்களுக்கு இலவசப் பகல் உணவு

சேலம், செப். 27—

சேலம் நகராண்மைக் கழகக் கூட்டம் 26-ந் தேதி மாலை தலைவர் பி. மதுரைப் பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

நகராண்மைக் கழகப் பள்ளிகளில் படிக்கும் ஏழைக் குழந்தைகளுக்கு இலவச மதியபகல் உணவு அளிக்க முடிவு செய்யப்பட்டது.

சேலத்தில் சென்னை—கன்னிக் கோட்டை பிரதான சாலையில் இரயில்வே லெவல் கிராசிங்கிற்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஓர் பாலத்தைக் கட்டுமாறு சென்னை அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேறியது.

சேலம் நகரில் உள்ள எல்லா வீட்டு இணைப்பு தண்ணீர்க் குழாய்களுக்கும் அளவை முறையை அமுலாக்க முடிவு செய்யப்பட்டது.

பஸ் நிலையத்தைத் திருத்தியமைக்க சென்னை அரசாங்கத்தினிடம் ரூ. 18,000 கடனுகக் கொடுக்கும்படி கேட்க முடிவு செய்யப்பட்டது. பஸ் நிலையத்தைத் திருத்தி அமைக்கும் வேலை நடைபெறுவதால் பஸ் நிலையத்தைத் தற்காலிகமாக போஸ் மைதானத்திற்கு மாற்ற முடிவு செய்யப்பட்டது. (ந—கி)

திண்டுக்கல்லில் பூட்டுத் தொழிற்சாலையாம்!

சென்னை, செப். 70—

திண்டுக்கல்லில் பூட்டு உற்பத்தியாளருக்கு ஒரு கூட்டுறவுக் கழகத்தை நிறுவும் திட்டத்துக்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்திருக்கிறது. அங்கே அரசாங்கத்தால் நடத்தப்படும் பயிற்சிப் பணி நிலையத்தை, அந்தப் பூட்டு உற்பத்தியாளர்கள் பயன்படுத்திக்கொள்ள வகை செய்வதே இதன் நோக்கமாகும். இதனை நிறுவுவதற்கு ரூ. 80,000 கடன் அரசாங்கம் தருகிறது; நிலம் கட்டிடங்கள் முதலிய முதலீட்டுச் செலவுக்கு ரூ. 54,000 செலவிட அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு வர்த்தகக் கழகத் தலைவர்களுக்கு மணிவிழா

குழு அமைக்கப்பெற்றது

22—9—57 பகல் 1 மணிக்கு சென்னை, எண் 20, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, தமிழ்நாடு வர்த்தகக் கழக அலுவலகத்தில் வர்த்தகப் பிரமுகர்களின் கூட்டம் திரு. எ. ஆர். இராமசாமி தலைமையில் நடைபெற்றது.

வர்த்தகச் சமுதாயத்தை உருவாக்கவும் பலகட்ட முனை விற்பனை வரியை எதிர்த்து ஒரு முனையில் விதிக்கவும் பாடுபட்டுவரும் தலைவர்களான விருதுநகர் திரு. வி. வி. இராமசாமி எம்.எல்.சி. ஈரோடு திரு. எம். ஜி. அங்கப்ப செட்டியார் ஆகிய இருவரும் அறுபது ஆண்டுகள் நிறைவு எய்தியுள்ளதால் அவர்களுக்கு மணி விழாக் கொண்டாட வேண்டிய தன் அவசியத்தைக் குறித்து திரு. வே. சு. விசுவநாதம் விளக்கிக் கூறினர்.

மணி விழாக் கொண்டாட ஏகமனதாக தீர்மானிக்கப்பெற்றது. மணி விழாக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

திண்டிவனம் மாணவர் இலக்கியக் கழகச் செயலாளர் தேர்வு

திண்டிவனம், செப். 29—

திண்டிவனம் நகர தி. மு. க. மாணவர் கிளையின் செயலாளரான தோழர் கோகில்மொழியன், இந்நகர அமெரிக்கன் ஆற்காடு மிஷன் உயர்நிலைப் பள்ளித் தமிழ் இலக்கியக் கழகச் செயலாளராக (இரண்டாவது முறையாக) போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

இந்திதனை அற்பமென்போம் நாம் இந்த

இந்தி எதிர்ப்புணர்ச்சித் தீ

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஆண்டு கழித்து தமிழ் நிச்சயம் இருக்காது.

"பாரசீக மொழிகளும், மற்ற மொழிகளும் இங்கு வந்து, அரேபிய மொழிகளும் வந்து சேர்ந்ததற்குப் பிறகு — சவமொழியோடு சேர்ந்ததற்குப் பிறகு ஏற்பட்ட மொழிதான் இந்தி மொழி.

"உருது என்றாலே 'பாசறை' என்று பொருள் எனக் கூறுகிறார்கள். பாசறையிலே போர் வீரர் தங்களுக்குள் ஒருவரோடு ஒருவர் பேசுவதற்கு ஏற்பட்ட மொழிதான் உருது. அது இப்பொழுது ஒரு மொழியாகவே இந்தியாவில் நிலைத்து விட்டது. அதற்குப் பிறகு ஏற்பட்ட மொழிதான் இந்தி. ஆகவே, ஒரு 1,000 ஆண்டுக்காலத்திற்குப்பிறகுதான் அதற்கு இலக்கண இலக்கியம் ஏற்பட்டிருக்கிறது என்ற நிலை பார்க்கிறோம்.

"எனவே, தமிழை வளப்படுத்துகிற மொழி இந்திமொழியா என்றால்—அல்ல; வாழ்வளிக்கிற மொழியா என்றால்—அல்ல; நமக்கு விஞ்ஞானத்தைக் கற்றுக் கொடுக்கக் கூடிய மொழியா?—அல்ல; அகில உலகத் தொடர்புக்குப் பயன்படுகிற மொழியா?—அல்ல; நமக்கு இனிமை பயக்கிற மொழியா?—அல்ல; அல்லது நமது மொழியா?—அல்ல! எனவே எந்தவகையிலே நின்று பார்த்தாலும் இந்தி நமக்கு ஆகாத மொழி—அது ஆதிக்கம் கொள்ளுகிற மொழி—அடிமைப் படுத்தும்; மொழி; எனவேதான், அந்த இந்தியை எதிர்த்துத்தீர வேண்டிய இன்றியமையாமைக்கு வந்திருக்கிறோம்.

"இப்பொழுது வங்காளிகள், மராட்டிகள், பஞ்சாபிகள் அத்தனைப்பேரும் கச்சைகட்டிக் கொண்டு கிளம்பிவிட்டார்கள். தென்னகத்திலே முதலில் உணராவிட்டாலும் கொஞ்சங் கொஞ்சமாக உணரத்தலைப்பட்டிருக்கிறார்கள். இந்த இந்தி எதிர்ப்பு அலைகள் நிச்சயம் தென்னாடு முழுவதும் பரவும்.

"இந்தியை எக்காரணம்கொண்டும் இந்த நாட்டிலே நிலைக்கவிடாத அளவுக்கு, இந்தி எதிர்ப்பு உணர்ச்சி மெல்லமெல்ல நாடெங்கும்—ஆனால் உறுதியாக பரவியிருக்கிறது. அந்தத் தன்மையை மேலும் மேலும் வளர்ப்போம்; இந்த நாட்டின் சொந்த மொழியை—தாய் மொழியைக் காப்பாற்றுவோம்; தாய்மொழியைப் பயன்படுத்தும் துறைகளில் பயன்படுத்துவோம்; தாய்மொழியினால் பயன்படுத்த முடியாத துறைகளில் ஆங்கிலத்தைப் பயன் படுத்வோம்—என்ற நோக்கோடுதான், தி. மு. கழகம், நாட்டு மக்களிடையேயும், ஆளுகின்ற ஆட்சியாளரிடையேயும் தனது கருத்தை எடுத்துவைக்கிறது; இந்தி தேவையில்லை என்ற கருத்தை மக்களிடத்தும், ஆட்சியாளருக்கும் எடுத்துவைத்து, இந்தியை முழுமூச்சோடு எதிர்த்து வருகிறது.

"இந்தத் தலைமுறையைச் சேர்ந்த நாம் அந்த ஆதிக்கத்தை எதிர்த்து, ஒழித்து, தடுத்து நிறுத்தாவிட்டால் நிச்சயம் இந்த நாடு அடிமைகொள்ளப்பட்டு, எடுப்பார் கைபிள்ளையாக — வந்தவர்களுக்கெல்லாம் இடம் கொடுக்கிற ஒரு நாடாகத்தான் மாறும். அந்த நிலையிலிருந்து இந்த நாட்டை நல்லதொரு நிலைக்குக் கொண்டுவர நம்முடைய தாய்மொழித் தமிழைக் காப்பாற்றுவோம்; திராவிடத்தினுடைய உரிமையைக் காப்பாற்றுவோம்; இந்த நாட்டை நாடாகவைப்போம்; இந்த நாட்டினுடைய பண்பாட்டைக் காப்பாற்றுவோம்.

"இந்தி எதிர்ப்பினுடைய உணர்ச்சித் தீயை மூட்டவும் திக்கெட்டும் பரவச் செய்யவும், நாட்டிலே இருக்கிற ஒவ்வொருவரும் மறத்தமிழர்களாக முன்னின்று இந்தியை எதிர்த்து ஒழிக்கவும் — தென்னாட்டிலிருந்து அகற்றவும்—அதனுடைய ஆதிக்கத்தைத் தடுக்கவுமான எல்லாம்வல்ல நடவடிக்கைகளிலும் ஈடுபடவேண்டிய நிலைமையிலேயே நாம் இருக்கிறோம்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

3—10—57 மாலை 6 மணிக்கு அண்ணா சொல்லவையின் சார்பில், கே. எஸ். பாண்டியன் நினைவு மன்றத்தில் (59 சஞ்சீவிராயன் கோவில் தெரு சென்னை—21) தோழர் கோவிந்தராசலு தலைமையில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும்.

* * *

3—10—57 இரவு 7 மணிக்கு வண்ணையம்பதி இளங்கோ கலை மன்றத்தில் (31 நாராயணப்ப நாய்க்கன் தோட்டம் 7-வது சந்து) தோழர் ர. வேணு தலைமையில் 'இந்தி ஆட்சி மொழியா?' என்ற தலைப்பில் பலர் பேசுவர். இந்தி எதிர்ப்புத் தீர்மானமும் நிறைவேற்றப்படும்.

சர்க்கார் தீவிர பஸ் போக்குவரத்து தொழிலாளர் கூட்டம்

சென்னை, அக். 2—

சென்னை சர்க்கார் தீவிர பஸ் போக்குவரத்துத் தொழிலாளர் சங்கத்தின் சிறப்புக் கூட்டமொன்று, நேற்று மாலை 6-30 மணிக்கு, சென்னை இராயப்பேட்டை—பழைய காங்கிரஸ் திடலில், சங்கத் தலைவர் தோழர் கி. மனோகரன் தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் மு. கருணாநிதி எம்.எல்.ஏ., காஞ்சி கல்யாணசுந்தரம், டாக்டர் சி. ஆர். கிருஷ்ண பிள்ளை, டிரைவர் கண்ணப்பா, கண்டக்டர் திருநாவுக்கரசு ஆகியோர் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர்.

கூட்டத்தில், கவர்னர் ஏ. ஜே. ஜான் மறைவுக்கும், டிரைவர் பச்சை பிள்ளை, கண்டக்டர் உமாபதி ஆகியோர் மறைவுக்கும் அனுதாபம் தெரிவித்தும், பஸ் போக்குவரத்து நிர்வாகக்குழுவின் (Council of management) தேர்தலில், தீவிர பஸ் தொழிலாளர் சங்க உறுப்பினர்களையே தேர்ந்தெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தோழர் மு. கருணாநிதி அவர்கள் பேசத்துவங்கி, சில நிமிடங்கள் பேசியதும், கனத்த மழை வந்ததால் அவர் தன் பேச்சை அதோடு முடித்துக்கொண்டார்; கூட்டம் முடிக்கப்பட்டுவிட்டது.

அண்ணா

சுற்றுப்பயணம்

அக்.

6 : பிற்பகல்—வில்லிவலம்
மாலை—செங்கற்பட்டு
7 : சென்னை
12 : காவேரிப்பட்டினம் (நாடகத் தலைமை)
13 : கோவை
14 : ஆனமலை
15 : சென்னிமலை
16 : கோபிசெட்டிப்பாளையம்

கழகக் கூட்டங்கள்

★

காவேரிப்பட்டணம்:
காந்தி திடலில்
4—10—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: பி. பிரசன்னன்
பேசுபவர்:
ஈ. வே கி. சம்பத் எம்.பி.
(மாலை 5-மணிக்கு தோழர் சம்பத் ஊர்வலமாக அழைத்து வரப்படுவார்)

★

துறையூர்:
கலைவாணர் திடலில்
தி. மு. கழகத் துவக்கவிழா
4—10—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: சி. தம்புசாமி
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
அரு. ஆதிமூலம்
தி. கிருட்டினசாமி
இளங்கோவன்

★

சிதாழிப்பாறைதோட்டம்
2-வது டிவிஷனில்
(கே. வி. கே. சாமி நினைவு நாள்)
3—10—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: பி. யூ. இராயப்பன்
பேசுவோர்:
ஜே. பி. ஜேபக்கனி
கே. பி. மருதமுத்து

★★★★★★★★★★★★★★★★★

விற்பனைக்குத் தயார்!

கே. வி. கே. சாமி நினைவு மலர்

ஆசிரியர்: எம். எஸ். சிவசாமி

அறிஞர்களும், கலைஞர்களும், கவிஞர்களும் தரும் வண்ணப் படைப்பு! ஏராளமான புகைப் படங்களுடன் சாமி, தாளமுத்து முதலியோரின் வரலாற்றுக் கவிதை, கட்டுரைகளுடன்!

64 பக்கங்கள்: விலை 12 அணா

விற்பனையாளர்களுக்கு 25 சதவிகிதம் கழிவு தரப்படும்.

விவரங்களுக்கு:
காரியதரிசி, ஸ்பின்னிங் மில் தொழிலாளர் சங்கம்,
Regd. No. 1629, தூத்துக்குடி

★★★★★★★★★★★★★★★★★

பிரெஞ்சு சர்க்கார் வீழ்ச்சி

அல்ஜீரியாவுக்கு அரசியல் சீர்திருத்தம் வழங்குவதில் தகராறு

பாரிஸ், செப். 30—

பிரான்சில் யுத்த பிற்காலத்தில் அமைந்த 23-வது மந்திரி சபையும் இன்று கவிழ்ந்துவிட்டது.

மாரிஸ் போர்ஜேமனுரி என்பார் தலைமையில் மூன்று மாதங்களுக்கு முன்பு அமைந்த மந்திரி சபை, அல்ஜீரியாவிற்கு அரசியல் சீர்திருத்தங்கள் வழங்கும் மசோதா ஒன்றினை தேசிய சட்டசபையில் கொண்டுவந்தது.

கடுமையான விவாதத்திற்குப் பிறகு நம்பிக்கை ஓட்டு எடுக்கப்பட்டதில் சர்க்காருக்குச் சாதகமாக 253 வாக்குகளும், எதிராக 279 வாக்குகளும் பதிவாயின; மந்திரிசபை வீழ்ந்தது.

அல்ஜீரியா முழுவதிற்குமாக ஒரு மத்திய நிர்வாக அமைப்பும் உருவாக்க வேண்டுமென மசோதா கூறியது.

'இப்படிச் செய்வதின் மூலம் அல்ஜீரியா, பிரான்சிலிருந்து விடுதலை பெற்றுக்கொள்ளும்வழி சுலபமானதாகிவிடும்' என்று எதிர்ப்பாளர்கள் தெரிவித்தனராம்!

சென்னை—வண்ணை (4-வது வட்ட) தி. மு. க. செயற்குழு உறுப்பினர்கட்கு:

3—10—57 இரவு 8 மணிக்கு மேற்படி வட்ட கழகப் பணிமனையில் செயற்குழுக் கூட்டம் நடைபெறும்; வரவு-செலவு மற்றும் பல முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்குவரும்.

'தஞ்சை வீழ்ச்சி' நாடகம்

2—10—57 மாலை 6 மணிக்கு சென்னை—ஒற்றைவாடை நாடக அரங்கில் இலக்கிய வளர்ச்சி நிதிக்காக, உலகியல் மன்றம் அளிக்கும், (கி. மா. பக்தவத்சலன் எழுதிய) 'தஞ்சை வீழ்ச்சி' என்னும் நாடகம் அண்ணா தலைமையில் நடைபெறும்.

ஜான் மறைவு:

மாநிலத்தில் ஒருவார துக்கம்

சென்னை, அக். 2—

மாநில கவர்னராயிருந்த ஏ. ஜே. ஜான் அவர்கள் நேற்று காலை இயற்கை எய்தியதை ஒட்டி, சர்க்கார், மாநிலத்தில் ஒருவார காலம் துக்கம் கொண்டாடுவதென முடிவு செய்து அறிவித்துள்ளனர்.

கொடிகள் பாதிக்கம்பத்தில் பறந்து கொண்டிருக்கின்றன.

இன்று மாலை 4-30 மணிக்கு ராஜாங்க மரியாதைகளுடன், மயிலாப்பூர் சாந்தோமில் அவரது சடலம் அடக்கம் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய கவர்னர்

கவர்னராயிருந்த ஜான் மரணத்தை ஒட்டி, மாநில உயர்நீதி மன்றத்தின் பிரதம நீதிபதியான பி. வி. இராஜமன்னார் அவர்கள், குடியரசுத் தலைவரால் தற்காலிக கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அதன்படி அவர், நேற்றுக் காலை 11-மணி அளவில் பதவிப் பிரமாணம் ஏற்றுக் கொண்டார்.

பிரதம நீதிபதி கவர்னரானதை ஒட்டி, நீதிபதி பி. இராஜகோபாலன், பிரதம நீதிபதியாக நியமிக்கப்பட்டு பதவி ஏற்றுக்கொண்டார்.

1,200 கைதிகளுக்கு விடுதலை!

இன்று அக்டோபர் 2-ம் நாள் காந்தியார் பிறந்த நாள் விழா; இதனை முன்னிட்டு 1,200 கைதிகளை விடுதலை செய்வது என, உ. பி. மாநில சர்க்கார் முடிவு செய்திருக்கின்றனர்.

திருவண்ணாமலை இந்தி எதிர்ப்பு மாநாட்டில்......



'வீட்டைத் துறந்தேன்; எனினும் நாட்டை, [illegible] யைத் துறந்திலேன்; தாய்மொழி காக்கத் தயங்கேன்' என முழங்குகிறார், மாநாட்டுத் தலைவர் சுவாமி அருணகிரி அடிகளார்.



★ வரவேற்புக் குழுத் தலைவர் முல்லை-சத்தி மாநாட்டிற்கு வந்திருந்தோரை, அகமும் முகமும் மலர வரவேற்கிறார். அருகே, மாநாட்டுச் செயலாளருள் ஒருவரான செயல்வீரர் ப. உ. சண்முகம் எம்.எல்.ஏ.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

அதன் ஆதிக்கம் ஒழிந்திட-அக்டோபர் 13.